24th July 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) and (b) The matter is under consideration.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இது எப்பொழுது முடிவடையும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது. பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியன்களும் எப்படிப் பகிர்ந்து கொள்வது, முனிசிபாலிடியும் பக்கத்திலுள்ள டவுன் பஞ்சாயத்தும் எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதெல்லாம் இருக்கிறது. கலெக்டர்களின் அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது. டெவலப்மெண்ட் கௌன்சில் அபிப்பிராயமும் கோரப்பட்டிருக்கிறது. இதில் அபிப்பிராயபேதமும் இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

582 கேள்வி :—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சினிமாக்களுக்கு விதிக்கப்படும் தமாஷா வரியினை ஜனத்தொகை விகிதாச்சாரத்தில் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் பிரித்துக் கொடுக்க உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், அதற்குக் காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

சினிமாக் காட்சிகள் (புதிய வரி)

* 583 கேள்வி.—**திரு. க. ரா. நல்லசிவம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சினிமாக் காட்சிகளின் மீது ஸ்தல ஸ்தாபனங்கள் சமீபத்தில் புதிதாக வரி விதித்துள்ளனவா ?

(இ) புதிய வரியை நீக்குமாறு சினிமாப்பட உற்பத்தியாளர்கள் கோரியுள்ளனரா ?

(உ) அப்படியானால் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) Yes, Sir.

(உ) The representation is under examination.

திரு. க. ரா. நல்லசிவம் : ஒரு ரூபாய்க்குக் குறைவான டிக்கட்டுகளுக்கு இருக்கின்ற வரியை ரத்து செய்து விட்டு அதற்கு உயர்வான டிக்கட்டுகளுக்கு மட்டும் இந்த வரியை விதித்தால் போதும் என்ற ஆலோசனை சர்க்காருக்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பிரச்னைகள் எல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. இதை எப்படிச் செய்யலாம் என்பதைப் பற்றி இப்போது சொல்வதற்கில்லை.

* 584 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state— 9-00 a.m.

(a) whether the representatives of film industry have recently made any representation regarding levy of surcharge on entertainment tax in pursuance of the Local Authorities Finance Act, 1961 ; and

(b) if so, the action taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The representations are under examination.